**களனி பிரதேச சபை - 2023**

-------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

களனி பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, தேறிய சொத்துக்கள்/ உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் களனி பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள்

மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

### 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை.

| உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை. | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நியமத்தின் பந்தி இலக்கம் பந்தி 3.26 இன் பிரகாரம் காசுப்பாய்ச்சல் கூற்றில் காசு மற்றும் காசுக்கு சமமானவைகளின் தேறிய அதிகரிப்பு பெறுமதி ரூபா 1,804,493 குறைத்தக் காண்பிக்கப்பட்டிருந்தது. | எதிர்வரும் ஆண்டின் போது சரியாக தயாரிக்கப்படும். | காசுப்பாய்ச்சல் கூற்று சரியாக தயாரிக்கப்படல் வேண்டும். |

#### 1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 03 கணக்கு விடங்களின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 51,660,622 ஆக இருந்த போதும் பட்டோலையின் பிரகாரம் ரூபா 57,986,132 ஆனமையால் ரூபா 6,325,510 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | வேறுபாடு தொடர்பாக பரீட்சிக்கப்படும். | வேறுபாடுகளை இனங்கண்டு சரிசெய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | தேறிய சொத்துக்களின் பெறுமதி, சொத்துக்கள் பொறுப்புக்கள் கூற்றின் பிரகாரம் ரூபா 3,123,804,710 ஆக இருந்தபோதும் குறிப்பு இலக்கம் 19 இன் பிரகாரம் ரூபா 3,126,414,340 ஆனமையால் ரூபா 2,609,630 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | எதிர்வரும் ஆண்டுகளின் போது சரியாக தயாரிக்கப்படும். | மேற்படி |

## 1.7 இணங்காமைகள்

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை.

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1946 இன் 30 ஆம் இலக்க வரி மற்றும் மதிப்பீட்டு சட்டம் | 2009 ஆம் ஆண்டில் மேற் கொள்ளப்பட்ட மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு மீளாய்வாண்டின் ஆதன வரி அறவிடப்பட்டிருந்தது. | ஆதனவரி மதிப்பீட்டைத் திருத்தும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள் ளது. | மதிப்பீட்டை மேற்கொண்டு புதிய ஆதனவரி வீதத்தின் பிரகாரம் அறவிடல் வேண்டும். |
| (ஆ) | 1972 இன் 7 ஆம் இலக்க வீட்டு வாடகைச் சட்டத்தின் 21(3)ஆம் பிரிவு | 2017 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரையான காலத்தில் 24 வாடகை குடியிப்பாளர்களுக்கு செலுத்த வேண்டிய ரூபா 184,809 செலுத்தப்பட்டிருக்க வில்லை. | வாடகையாளர்களு க்கு கடிதம் அனுப்பப்பட்ட போதும் பணம் பெறப்பட்டிருக்க வில்லை. | வாடகையாளர்க ளுக்கு அறிவத்து உரிய பணம் செலுத்துதல் வேண்டும். |
| (இ) | இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் நிதிப்பிரமாணம் 371 | 45 முற்பண மீதிகளின் பெறுமதி ரூபா 1,880,535 தொகை அறவிடப்பட்டிருக்க வில்லை. | சரிசெய்யப்படும் | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ஈ) | பிரதேச சபைகள் நிதி நிருவாகத்திற்குரிய கணக்கு நடவடிக்கைகள் தொடர்பான கட்டளை 08 | நிதிக் கூற்றுக்களுக்கு அடுத்துவரும் நிதியாண்டின் பெப்ரவரி 28 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்கள் 2024 மே 02 ஆந் திகதி சமர்ப்பிக்கப் பட்டிருந்தது. | ஏற்றுக் கொள்கின்றோம். | கட்டளையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 411,945,994 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 111,371,688 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கும், முன்னைய ஆண்டிற்கும் உரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மான மூலம் | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப்பட் ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப்ப ட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | ஆதன வரியும் வரியும் | 71,951,100 | 70,179,783 | 78,214,936 | 42,836,295 | 71,000,000 | 62,635,232 | 14,462,268 | 48,998,852 |
| (ii) | வாடகை | 30,160,875 | 29,956,398 | 31,737,215 | 11,446,625 | 28,175,400 | 31,913,924 | 30,789,868 | 22,830,680 |
| (iii) | அனுமதி ப்பத்திரக் கட்டணம் | 1,000,000 | 1,329,862 | 1,271,269 | 58,593 | 5,700,000 | 3,426,652 | 3,426,652 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 418,427,700 | - | 706,017,533 | - | 8,750,000 | 13,448,854 | 13,448,854 | 733,489 |
| | மொத்தம் | 521,539,675 | 101,466,043 | 817,240,953 | 54,341,513 | 113,625,400 | 111,424,662 | 62,127,642 | 72,563,021 |

### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரித்தலின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) ஆதனவரியும் வரியும் | | |
| (i) காலப் பகுப்பாய்வின் பிரகாரம் மீளாண்டின் இறுதியில் உள்ளவாறு ரூபா 42,836,295 நிலுவை ஆதனவரி மீதியில் 10 வருடங்களுக்கு | நடமாடும் நிகழ்ச்சித் திட்டம் மற்றும் ஏனைய நிகழ்ச்சித் திட்டங்களின் மூலம் | நிலுவை ஆதனவரி மீதி அறவிடப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மேற்பட்ட மீதி ரூபா 10,955,223 தொகையும், 05 இற்கும் 10 வருடங்களுக்கும் இடையிலான மீதி ரூபா 11,990,480 தொகையும் காணப்பட்டது. | அறவிடப்படுகின்றது. | |
| (ii) | நிலுவை வருமான அறிக்கையின் பிரகாரம் மீளாவாண்டின் ஆரம்பத்தில் உள்ளவாறு நிலுவை ஆதனவரி ரூபா 47,166,492 மீதியில் ரூபா 20,273,377 அறவிடப்பட்டமையால் அறவிடல் வீதம் 43 சதவீதமான குறைந்த பெறுமதியைக் கொண்டிருந்தது. | மேற்படி | மேற்படி |
| (iii) | மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு காணி மற்றும் கட்டிடங்களை வாடகைக்கு வழங்குதலின் நிலுவையான மீதி ரூபா 945,253 தொகையில் 01 இற்கும் 03 வருடங்களுக்கும் இடையில் காணப்பட்ட ரூபா 771,184 தொகை மற்றும் 01 வருடத்திற்கு குறைவாக காணப்பட்ட ரூபா 111,639 தொகை என்பன 2024 மே 02 ஆம் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்க வில்லை. | அறவிடப்படுகின்றது. | காணி மற்றும் கட்டிடங்களை வாடகைக்கு வழங்கியதால் உள்ள நிலுவை மீதி அறவிடப்படல் வேண்டும். |
| (ஆ) | வாடகை | | |
| (i) | மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு நிலுவை வியாபார நிலைய வாடகை மீதி 05 வருடங்களை விஞ்சிய ரூபா 1,714,507 தொகையும், 03 இற்கும் 05 வருடங்களுக்கும் இடையிலான ரூபா 266,972 தொகையும் காணப்பட்டது. | எதிர்ப்பு விசாரணையின் பிரகாரம் அறவிடப்படும். | வியாபார நிலைய நிலுவை மீதி அறவிடப்படல் வேண்டும். |
| (ii) | ஏனைய நிலையங்களின் வாடகை நிலுவை மீதி மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் உள்ளவாறு ரூபா 187,193 மற்றும் ஆண்டில் அறவிடல் ரூபா 15,000 ஆனமையால் அறவிடல் வீதம் 8 சதவீதம் ஆன குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. | வழுக்களை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ஏனைய நிலையங்களின் வாடகை நிலுவை மீதி அறவிடப்படல் வேண்டும். |
| (iii) | 2004 ஆம் ஆண்டின் போது சபைக்குச் சொந்தமான விழா மண்டபம் வாடகைக்கு வழங்கும் போது ஏற்பட்டிருந்த நிலுவை வாடகை ரூபா 733,489 தொகை 2023 திசம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்க வில்லை. | வழக்குத் தீர்ப்பிற்கு பாதிப்பிற்கு உட்பட்ட தரப்பினருக்கு நீதிமன்ற கட்டளையைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | நிலுவை வாடகை மீதி அறவிடப்படல் வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 சட்டத்தினால் கையளிக்கப்பட்ட பணிகளை நிறைவேற்றுதல்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சமுதாய அபிவிருத்தி பிரிவு, பெறுமதி ரூபா 18,050,000 ஆன 16 செயற்பாடுகள் அமுல்படுத்தாமையின் காரணமாக செயலாற்றல் 41 சதவீதமாக இருந்தது. | 16 செயற்பாடுகளை அமுல்படுத்துவதற்கு முடியாதிருந்தது. | செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | சபையினால் அமுல்படுத்தப்படுகின்ற 04 சுடலைக் கூடங்களுக்காக 2022 சனவரி 27 ஆம் திகதிய இலக்கம் 2264/18 என்ற அதிவிஷேட வர்த்தமானிப் பத்திரத்தின் பிரகாரம் சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெறப்பட்டிருக்கவில்லை. | விண்ணப்பம் மற்றும் ஆவணங்கள் பூர்த்தி செய்யப்பட்டு மத்திய சுற்றாடல் அதிகார சபைக்கு அனுப்பப்பட்டுள்ளது. | வர்த்தமானியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கொல்ஹேன விளையாட்டு மைதானத்தில் காணப்படுகின்ற உடற்பயிற்சி நிலையத்தில் உள்ள உடற்பயிற்சி உபகரணங்களில் 29 விடயங்கள் நிலையான சொத்தாக இனங்கண்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் பட்டோலைகளில் உள்ளடக்கி மீள் மதிப்பீடு செய்யும் நடவடிககைகள் மேற்கொள்ளப்படும். | நிலையான சொத்து பதிவேட்டில் உள்ளடக்கிய கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் விபத்திற்கு உட்பட்ட JCB இயந்திரத்தின் மதிப்பீடு செய்யப்பட்ட காப்புறுதி இழப்பீட்டு பெறுமதி ரூபா 2,422,762 தொகை 2024 மே 02 ஆம் திகதி வரையிலும் கிடைத்திருக்கவில்லை. | பழுதுபார்த்தல் பூர்த்தி செய்யப்பட்டு நலன்களைப் பெற்றுக் கொள்வதற்கு தேசிய காப்புறுதி நிதியத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. | பழுதுபார்ப்பதற்குரிய இழப்பீட்டு பணம் பெற வேண்டியிருந்ததுடன் இயந்திரத்தைப் பயன்படுத்துதல் வேண்டும். |

**3.3 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கூட்டுப்பெறுமதி ரூபா 12,654,114 ஆன 03 சொத்துக்கள் 05 வருடங்கள் முதல் 08 வருடங்கள் வரையான வீச்சில் பயன்பாட்டில் இருந்து அகற்றப்பட்டிருந்தது. | 02 இயந்திரங்கள் வேறு சபைகளுக்கு வழங்குவதற்கு உள்ளூராட்சி ஆணையாளர் (மே.மா) இருந்து அங்கீகாரம் கோரப்பட்டுள்ளதுடன் மற்றைய இயந்திரம் விற்றுத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வேறு சபைகளுக்கு கையளிப்பதற்கு, ஏலத்தில் விற்பனை செய்வதற்கோ அல்லது விற்றுத் தீர்ப்பதற்கோ நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 03 வருடங்கள் அளவிலான காலம் முதல் செயலிழந்த நிலையில் காணப்படுகின்ற ஹுனுப்பிட்டிய பழைய சுடலைக் கூடம் பழுதுபார்க்கப்பட்டிருக்கவில்லை. | கோரப்பட்ட கூறுவிலைகள் ரூபா 50 இலட்சத்தை விஞ்சியிருந்தது. 2024 ஆம் ஆண்டில் பழுதுபார்த்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | பழுதுபார்த்து பயன்பாட்டிற்கு எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | துருப்பிடித்த இலக்கம் இன்றிய 09 டெய்லர்கள், 03 கை வண்டிகள் மற்றும் கலிபௌசர் முறையான பிரகாரம் அகற்றப்பட்டிருக்க வில்லை. | விற்றுத்தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | பயன்பாட்டிற்கு எடுக்கமுடியாத சொத்துக்கள் முறையான பிரகாரம் அகற்றுதல் வேண்டும். |

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையினால் பயன்படுத்தப்படுகின்ற 21 காணிகளுக்கு நில வரைபடமும், 76 இற்கு உரித்தை உறுதிப்படுத்தும் சட்ட ரீதியான ஆவணமும் காணப்படவில்லை. | நில வரைபடம் தயாரித்து வெளியீட்டு உரித்துறுதி தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நில வரைபடம் தயாரித்து உரித்துறுதி உறுதிப்படுத்தப்பட ல் வேண்டும். |
| (ஆ) | 05 மயான நிலங்களில் காணப்படுகின்ற கட்டிடங்கள் நிலையான சொத்துப் பதிவேட்டில் உள்ளடக்கி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | மீள் மதிப்பீடு செய்து நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படும். | உரிய சொத்துக்கள் பதிவேடுகளுக்கு கொண்டு வந்து கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி ரூபா 34,000 ஆன 03 இயந்திரங்கள் பௌதீக காணப்படவில்லை. | பதிவேட்டில் அந்த இயந்திரம் எதுவும் உள்ளடக்கப்படவில்லை. | நிதிக்கூற்றுக்களில் உரித்தான சொத்துக்கள் சரியாக இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | இலக்கத் தகடு இன்றிய 06 டெய்லர்கள் பயன்படுத்தப்படுகின்றது. | இலக்கத் தகடைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இலக்கத் தகடு பொருத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.5 மனித வள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சேவையில் நீக்கப்பட்ட, சேவையை விட்டுச் சென்ற, மரணமடைந்த மற்றும் ஓய்வு பெற்றுச் சென்ற 11 உத்தியோகத்தர்களின் நிலுவையாக இருந்த ஊழியர் கடன் மீதி ரூபா 1,318,990 ஆக காணப்பட்டது. | வேலை நீக்கம் செய்யப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு மீள் நினைவூட்டல் கடிதம் அனுப்பப்பட்டுள்ளதுடன் வேலையை விட்டுச் சென்ற உத்தியோகத்தர்களின் பிணையாளர்களின் ஓய்வூதியம், முன்னர் விட்டுச் சென்ற மற்றும் மரணமடைந்த மற்றும் ஓய்வுபெற்றுச் சென்ற உத்தியோகத்தரின் பணிக்கொடையிலிருந்து கிடைத்திருக்கவில்லை. | ஊழியர் கடன் அறவிடப்படல் வேண்டும். |